[3rd November 1966

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) 790 அடி.

(இ) இத்திட்டத்திற்காக 31-3-1966 வரை 129 லட்சம் ரூபாய் செலவாயிற்று.

'டாக்சி' கட்டணம்

* 356 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : } கனம் கைத்தொழில்
திரு. எஸ். ஜே. ராமசாமி :
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரில் மூன்று சக்கர டாக்சிகள் விடுவதற்கான அனுமதி தர அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

(இ) ஆம் என்றால் எப்பொழுது அமல் நடத்தப்படும் ?

(உ) அதற்குக் கட்டணம், இப்போதுள்ள பேபி டாக்சியின் கட்டணம்போல் நிர்ணயிக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) முதல் (உ) வரை : சென்னை நகரில் மூன்று சக்கர டாக்சிகளை விடும் செயற் குறிப்பு ஒன்று அரசாங்கத்திடம் வந்துள்ளது. இது பரிசீலனையில் உள்ளது.

* 357 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the rates of fares for baby and medium taxis in the State; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The rates of fares for baby taxis and medium taxis have been fixed with effect from 1st October 1966 as follows :—

(i) for each kilometre—40 Paise.

(ii) Minimum charge for a distance of 1¾ kilometres—70 Paise.

(iii) Waiting charges—10 Paise for every five minutes in waiting.

திரு. வை. சங்கரன் : சார், இந்தக் கட்டண உயர்வை உத்தேசித்தாவது, பொதுமக்களுடைய நலனைக் கருதி, நான்கு பேர்கள் போகலாம் என்று அவர்களுக்கு பிரயாணத்திற்கு ஓரளவு வசதி செய்து கொடுக்கும் வகையில் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இன்றைக்கு பேபி டாக்சி என்பதில் சாதாரணமாக 'ஸ்டாண்டர்ட்' 'ஹெரால்ட்', 'ஃபியட்' போன்றவைகள்தான் இருக்கின்றன. அவற்றில் ட்ரைவரைத் தவிர நான்கு பேர்கள் உட்காரக் கஷ்டமாக இருக்கும். 'அம்பாஸிடார்'-ல் ட்ரைவரைத் தவிர நான்கு பேர்கள் உட்காரலாம் என்றிருக்கிறது.